**<u>2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,</u>**
**<u>திருவள்ளூர் @ பூந்தமல்லி</u>**

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாள் வியாழக்கிழமை**

**<u>இ.ம.எண்.1/2025 ன் அசல் வழக்கு எண்.255/2023</u>**

திரு. O. வேலு

...மனுதாரர்/வாதி

..எதிர்..

திரு. G. மணி

... எதிர்மனுதாரர் /பிரதிவாதி

இம்மனு 12.02.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் M/s. T. முத்தமிழ்செல்வி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் திரு. N.R. கோபாலன் அவர்கள் ஆஜராகியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்ததில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனு மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 7 விதி 14 (3)ன் கீழ் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

G
BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 23:02:41 +0530

2. <u>மனுதாரர்/வாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்</u>:–

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர் / வாதி, தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக, வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போது மனு ஆவணங்களை தாக்கல் செய்ய முடியவில்லை. தனது வழக்கை நிரூபிக்க அந்த ஆவணங்கள் முக்கியமானவை. எனவே அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாகிறது. இந்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள மறுப்பது அவருக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் எனவே, மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதித்து உத்தரவிட வேண்டும்.

3. <u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:–</u>

இந்த மனுதாரர், சரியான வழக்கு மனுக்களால் ஆதரிக்கப்படாத மற்றும் தொடர்பற்ற பல ஆவணங்களை தாக்கல் செய்ய முற்படுகிறார். அவற்றை முன்னதாக தாக்கல் செய்யாததற்கு குறிப்பிட்ட எந்த காரணமும் அளிக்கப்படவில்லை, பிரமாணப் பத்திரம் "தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களால்" என்று மட்டுமே கூறுகிறது. ஆவணங்கள் 1–5 ஆகியவை 1916–1971 காலத்தைச் சேர்ந்தவை, மற்றவற்றில் இறப்புச் சான்றிதழ்கள், பட்டா உத்தரவுகள் மற்றும் FMB பதிவேடுகள் அடங்கும். 1967 ஆம் ஆண்டைய அடமானம் தொடர்பான சில ஆவணங்கள் 2016 இல் மட்டுமே உருவாக்கப்பட்டன, அந்த அடமானம் 1979 இல் ஏற்கனவே காலக்கெடுவை இழந்துவிட்டது. கனகவல்லியும் அவரது மகன்களும் முன்னதாக அசல் வழக்கு எண்.1864/1988 ஐ தாக்கல் செய்திருந்ததால், இந்த ஆவணங்கள் தேவையற்றவை, அது பின்னர் அசல் வழக்கு எண்.266/1997 ஆக மாற்றப்பட்டு, இயல்பு நிலையில் தள்ளுபடி

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 23:02:46 +0530

செய்யப்பட்டது. மேலும் வழக்கை மீட்டெடுப்பதற்கான தாமத மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. கனகவல்லியின் சட்ட வாரிசுச் சான்றிதழ், அவரது மகள்கள் வாரிசுகளாகக் காட்டப்படாததால், கையாளப்பட்டதாகத் தெரிகிறது. 2016 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் ஒன்னப்பனுக்கு ஆதரவாகவும், பின்னர் வழக்குத் தாக்கல் செய்த வேலு மற்றும் முருகனுக்கு ஆதரவாகவும் செய்யப்பட்ட சீர்திருத்தப் பத்திரங்கள், முந்தைய வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர், அசல் வழக்கு எண்.1968/1991 (பின்னர் O.S. எண்.119/1996) இல் உள்ள தீர்ப்புக்கு மாறாகவும் இருப்பதால், அவற்றை நம்ப முடியாது. வாதிகளின் பெயரிலான பட்டா மற்றும் 'A' பதிவேடு, 2007 முதல் பட்டா எண்.837 ஏற்கனவே பிரதிவாதியின் பெயரில் இருந்தபோதிலும், பிரதிவாதிக்கு அறிவிப்பு இல்லாமல் தானியங்கி மாற்றல் மூலம் பெறப்பட்ட கையாளுதல்கள் ஆகும். இறப்புச் சான்றிதழ்கள், கிஸ்து ரசீதுகள் மற்றும் வில்லங்கச் சான்றிதழ்கள் போன்ற பிற ஆவணங்களுக்கு எந்தத் தொடர்பும் அல்லது சாட்சிய மதிப்பும் இல்லை. எனவே, இத்தகைய தேவையற்ற மற்றும் தொடர்பற்ற ஆவணங்களைத் தாக்கல் செய்வது வழக்கின் மீது சுமையை ஏற்படுத்துகிறது. எனவே இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4. <u>தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>:—**

இம்மனு மனுதாரரால் கோரப்படும் பரிகாரம் அனுமதிக்கக் கூடியதா? என்பதாகும்.

**5.** இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியம் இல்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 23:02:51 +0530

<u>பிரச்சனை:–</u>

6. இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர்/வாதி விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கானது வாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர்/வாதி இந்த மனுவை தாக்கல் செய்து, தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக, வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போது மனு ஆவணங்களை தாக்கல் செய்ய முடியவில்லை என்றும் தனது வழக்கை நிரூபிக்க இந்த ஆவணங்கள் முக்கியமானவை என்றும் எனவே, மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள பொருண்மைகள் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மறுத்துரைக்கப்பட்டு ஆவணங்களை முன்னதாக தாக்கல் செய்யாததற்கு குறிப்பிட்ட எந்த காரணமும் கூறப்படவில்லை என்றும் தேவையற்ற மற்றும் தொடர்பற்ற ஆவணங்களைத் தாக்கல் செய்வது வழக்கின் மீது சுமையை ஏற்படுத்துவதாகவும், எனவே இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ள போதிலும் மனுதாரர்/வாதி விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கானது மனுதாரர் / வாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில் மனுதாரர் / வாதி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதிப்பதாலேயே எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு எவ்வித இழப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என்றும் அவை சட்டத்தின்பால் ஏற்கத்தக்கதாக

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 23:02:55 +0530

அமையும் போது மட்டுமே பரிசீலனைக்கு ஏற்கப்படும் என்கிற நிலையிலும் எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு அவற்றைப் பொருத்து மறுத்து மெய்ப்பிக்க உரிய வாய்ப்புகள் உள்ள நிலையிலும் அசல் வழக்கின் தன்மையை கருத்திற்கொண்டும் நீதி நலன் கருதியும் இம்மனுவை அனுமதிப்பது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவில், மனுதாரர்/வாதி மனுவில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் அசல் அல்லது சான்றளிக்கப்பட்ட ஆவணங்களை மட்டுமே நீதிமன்றத்தில் குறியீடு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமயமாக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 23:03:03 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>– இல்லை**

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 23:03:08 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

<u>வரைவு/தெளிவு உத்தரவு</u>

**இ.ம.எண்.1/2025 ன்**

**அசல் வழக்கு எண்.255/2023**

**நாள் 12.03.2026**

**2 வது கூ.மா.அ.நீ., பூந்தமல்லி.**